டெப்டி கலெக்டர்கள், அந்தத் துறையிலிருந்து மாவட்ட விசேஷ உதவியாளர்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கோ. இளங்கோவன் : வேறு பணியாளர்கள் என்று நான் குறிப்பிட்டது மக்கள் தொடர்பு அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் காடரில் அல்லாத அஸிஸ்டன்ட்ஸ் போன்றிருப்பவர்களைப் பற்றித்தான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : 17 செய்தி உதவியாளரும் 27 விளம்பர உதவியாளரும் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய வாக்காளர் பட்டியல்.

*35 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றிய வாக்காளர் பட்டியல் திருத்தி அமைக்கப்பட அரசு ஆணை வழங்கியுள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆம்.

திரு. என். கிட்டப்பா : ஊராட்சி ஒன்றிய வாக்காளர் பட்டியல் திருத்தப்படுவதுபோலவே நகராட்சிகள் வாக்காளர் பட்டியலும் திருத்தப்படுவதாகத் தெரிகிறது. அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில்கூட ஒரு முறை வாக்காளர் பட்டியல் திருத்தப்பட்டிருக்கிறது. சட்டமன்றத் தேர்தலின்போது திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியலை இந்த ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களிலும் பயன்படுத்த அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : சட்டமன்றத் தேர்தல் போது திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியலையொட்டியே ஊராட்சி மன்ற வாக்காளர் பட்டியலும் திருத்தப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஆர். இராதா : வாக்காளர் பட்டியல் திருத்தப்படுகிறதே தவிர புது வாக்காளர் பட்டியல் தயாரித்தால்தான் திருத்தப்படுவதில் உள்ள பல்வேறு பிழைகள் மாற்றப்பட்டு உண்மையான வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க முடியும், அப்படித் தயாரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

1977 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : புதிதாக வாக்காளர்களாக சேருபவர்களுக்கு அத்தகைய வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. 20-6-1977-க்கு முன்னல் வாக்காளர் பட்டியல் வெளியிட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிருர்கள். ஆகவே விண்ணப்பத்தாள்களைப் பூர்த்தி செய்து விண்ணப்பம் செய்துகொண்டால் சேர்ப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

[முற்பகல் 9-10]

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சட்டசபைக்கும், பாராளுமன்றத்திற்கும் நடைபெறுகிற தேர்தலுக்கு ஒரே வாக்காளர் பட்டியல் இருக்கவேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு ஆணை பிறப்பித்திருக்கிறது. அதே போன்று ஊராட்சிமன்றத்திற்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கும், நகர மன்றத்திற்கும் தேர்தல் நடைபெறும்போது, இவற்றுக்கு ஒரு வாக்காளர் பட்டியலை தனியாகத் தயாரிக்கின்ற பொறுப்பை மாநில அரசு ஏற்று உருவாக்கப்படுகின்றது. இவ்விதம் இருப்பதை மாற்றி எல்லாவற்றுக்கும் சேர்ந்து ஒரே வாக்காளர் பட்டியலைத் தயாரித்து, எந்த நேரத்திலும் எந்த அமைப்புக்கும் தேர்தல் நடத்துவதற்குத் தகுந்த அளவில் ஒரே வாக்காளர் பட்டியலாக உருவாக்க மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து ஆலோசித்துத் தயாரிக்க வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுபற்றி இனிதான் யோசிக்க வேண்டும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : வாக்காளர் பட்டியல் பலவற்றிலும் கிராமப்புறங்களில் இருக்கின்றவர்களின் பெயர்கள் சென்னையில் இருக்கின்றன, சென்னையில் இருக்கின்றவர்களின் பெயர்கள் கிராமப்புறங்களில் இருக்கின்றன. இதனல் பல ஊழல்கள் நடைபெறுகின்றன. ஆகவே இதை நீக்கிவிடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தவறுகள் சுட்டிக் காட்டப்பட்டால் அந்தத் தவறுகளை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

LEGISLATIVE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. கு. ரமணி : கிராமங்களில் பஞ்சாயத்தின்கீழ் இருக்கின்ற மக்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள், அரிசன மக்கள், படிப்பு வாசனையற்ற மக்கள் ஏராளமாக இருப்பதால், வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படும்போது, எனுமரேட்டர்கள் வருவார்கள் என்று போதிய விளம்பரம் முன்கூட்டியே செய்யப்படுவதில்லை. மேலும் எனுமரேஷனைப்பற்றி அவர்களுக்கு உணர்வு உண்டாக்கு கின்ற முறையில் போதிய அளவுக்கு முன் கூட்டியே போதியளவு விளம்பரங்களை செய்வதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தகுந்த ஏற்பாடு செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, 19-3-1977 தேதியோடு நகராட்சி பகுதிகளில் வாக்காளர் பதிவு முடியும் என்று தெரிகிறது. தேர்தல் நடப்பதற்கு இன்னும் மூன்று நான்கு மாதங்கள் இருக்கின்றன. ஆகவே இன்னும் பதிவு செய்யக்கூடிய நேரத்தை நீட்டித்துக்கொடுத்து முழுமையாக பட்டியலை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : புதிதாக சேர்ப்பதற்குரிய நேரத்திற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு ஒரு வாரத்திற்கு முன் வரை விடுபட்டு போன பெயர்களை பதிவு செய்து கொள்வதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். சுந்தரராஜன் : வாக்காளர் பட்டியலில் இறந்து போனவர்களின் பெயர்கள் இருக்கின்றன. இப்படி இறந்து போனவர்களும் வாக்களிக்க வந்துவிடுகிறார்கள். ஆகவே இவர்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இறந்தவர்களை இறந்தவர்களாகவே ஆக்குவதற்குரிய ஏற்பாடு செய்யப்படும்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தங்களுக்கு ஒரு வேண்டுகோள். கேள்வித்தாள்கள் ஆங்கிலத்தில் இருக்கின்றன, தமிழில் அனுப்பப்படவில்லை. இதை வேறு சில உறுப்பினர்களும் சொல்லுகிறார்கள். இதுவரை எங்களுக்கு இன்னும் தமிழில் உள்ள கேள்வித்தாள்கள் வரவில்லை. தாங்கள் இதைப்பற்றி கவனிக்கவில்லை என்று கருதுகிறேன்.

1977 ஆகஸ்ட் 8]

அடுத்து, ஒரு கட்சியிலுள்ள சிலர் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்கும்போது, மாற்று கட்சியினர் அதை மாற்ற வேண்டும் என்று எண்ணினால், அதே தெருவிலுள்ள யாராவது ஒருவர் இவர்கள் எல்லாம் இந்தத் தெருவில் இல்லை என்று எழுதிக் கொடுத்துவிட்டால் அவர்களுடைய பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். 1 முதல் 75 வரை, அல்லது 815 லிருந்து 885 வரை வாக்காளர்கள் இல்லை என்று எழுதி விட்டால், அப்படியே குழு குழுவாக பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு விடுகின்ற நிலை ஏற்படுகின்றது. அத்துடன் இவர்கள் வாக்களிக்க முடியாது என்றும் கூறப்படுகின்ற முறை ஏற்படுகிறது, ஆகவே அப்படி நீக்குவது என்றால், அதற்கு அந்த அதிகாரியே பொறுப்பு எடுத்துக்கொண்டு தனித்தனியாக விசாரித்து நீக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அவ்விதம் குறைகள் ஏற்படாதவாறு அரசாங்கம் பார்த்துக்கொள்ளும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : ஊராட்சி மன்றத்திற்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் தனித்தனியாக வாக்காளர் பட்டியல் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. எம். ஏ. ஜெயவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு வைத்திருக்கின்ற முதலமைச்சர்களின் பெயர் பட்டியலில், முதலில் இருந்த முதலமைச்சரின் பெயருக்கு நேராக 1969-லிருந்து என்று போட்டு எப்போது எந்த வருடம் முடிந்தது என்று போடாமல் விட்டு, புரட்சித் தலைவருடைய பதவி காலத்தையும் போட்டிருக்கிறார்கள், என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதைச் சரியாக போடாவிட்டால் தவறான கருத்தை ஏற்படுத்தும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

*31 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுப் பேருந்துகளில் 1976 ஜனவரித் திங்களுக்குப் பின்னால் இருபது அம்சத் திட்டம் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதா ?